கொடுமைப்படுத்தலுக்கு எதிரான நடவடிக்கை

# பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான குறிப்புகள்

மெய்த்தகவல் அறிக்கை

## கொடுமைப்படுத்தல் என்றால் என்ன?

**கொடுமைப்படுத்தலில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன. அது:**

- உறவைக் காரணமாகக் கொண்டு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கொண்டிருத்தல்
- தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருத்தல் அத்துடன் திரும்பத்திரும்ப செய்யப்படுதல், மற்றும்
- தீங்கு விளைவிக்கக்கூடிய நடத்தைகளைக் கொண்டிருத்தல்.

**கொடுமைப்படுத்தல்** என்பது இணையத்திலும் நடைபெறக்கூடும். இது இணையவழிக் கொடுமைப்படுத்தல் (cyberbullying) என்று அழைக்கப்படுகிறது. இது ஒருவரைக் கொடுமைப்படுத்துவதற்காக இணையம் அல்லது கைப்பேசிக் கருவிகள் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. இதில் முறைகேடான குறுந்தகவல்கள் மற்றும் மின்னஞ்சல்களை அனுப்புதல், புண்படுத்தக்கூடிய செய்திகளைப் பதிந்து விடல் மற்றும் மற்றவர்களின் படங்களுக்குப் பொருத்தமற்ற கருத்துக்களை எழுதுதல் போன்றவை அடங்கும்.

எந்த வகையான **கொடுமைப்படுத்தலையும்** எந்தக் காரணத்தைக் கொண்டும் NSW பள்ளிகளில் ஏற்றுக்கொள்ள முடியாது. கொடுமைப்படுத்தலைத் தடுக்கவும், அப்படி அது நடக்கும் பட்சத்தில் விரைவாகவும், திறம்படவும் எதிர்கொள்ளவும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் இணைந்து வேலை செய்ய பள்ளிகள் உறுதி கொண்டுள்ளன.

## உங்கள் குழந்தை கொடுமைப்படுத்தப்பட்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

**அமைதியாகக் கேட்கவும். அத்துடன் முழுக் கதையையும் தெரிந்து கொள்ளவும்.**

தான் சொல்வது கேட்கப்படுகிறது என்பதை உங்கள் குழந்தை தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களது உணர்வுகள் முக்கியமானவை அத்துடன் அவர்களது கவலைகள் அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டும். என்ன நடந்தது என்பதைப் பற்றி உங்கள் குழந்தை பேசுவதற்கு ஊக்குவிக்கவும். கொடுமைப்படுத்தலைப் பற்றி புகார் செய்வது சரிதான் என்பதை உங்கள் குழந்தைக்கு விளக்கவும்.

அவர்களது கவலைகளைக் காது கொடுத்துக் கேட்ட பின், தேவைப்பட்டால் யார், என்ன, எங்கே, எப்போது என்பதைப் பற்றி மேலும் விவரங்களைப் பெற கேள்விகள் கேட்கவும்.

**உங்கள் குழந்தையிடம் அவர்கள் மேல் குற்றம் ஏதும் இல்லை என்று உறுதியளிக்கவும்**

குழந்தைகள் தங்களைத் தாங்களே குற்றம் சுமத்திக் கொள்ளக்கூடும். அத்துடன் இது அவர்களை மேலும் மோசமாக உணரவைக்கக்கூடும். 'இது சமாளிக்க மிகக் கடினமாக இருப்பதைப் போல் தோன்றுகிறது', அல்லது 'நீ என்னிடம் கூறியதற்கு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. பள்ளியில் நீ பாதுகாப்பாக இருப்பதை உணரவேண்டும்' போன்ற ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லவும்.

**அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் – மற்றும் நீங்கள் என்ன செய்யவேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை உங்கள் குழந்தையிடம் கேட்கவும்**

அவர்களுக்கான தீர்வை அவர்களே கண்டறிய உங்கள் குழந்தைக்கு உதவிபுரிவது முக்கியமாகும். ஏனென்றால் சூழ்நிலை அவர்களது கட்டுப்பாட்டில் ஓரளவு இருப்பதாக அவர்கள் உணர்வதற்கு இது உதவிபுரியும்.

உங்கள் குழந்தைக்கு எந்தவொரு உடனடி ஆபத்தும் இல்லாதிருந்து, அவர்கள் நம்பிக்கையாக இருப்பதாக உணர்ந்தால், அவர்கள் பின்வரும் உத்திகளை முயற்சி செய்யலாம்:

- கொடுமைப்படுத்தலை அலட்சியம் செய்யவும்.
- திரும்பிப் பார்க்காமல் ஒதுங்கி வெளியேறி விடவும்.
- கண்டுகொள்ளாத மாதிரி நடிக்கவும் அல்லது அதைப் பற்றிக் கவலைப்படாதது போல பாவனை செய்யவும்.
- "இல்லை" அல்லது "இதோடு நிறுத்திக்கொள்!" என்று உறுதியாகச் சொல்லவும்.

கொடுமைப்படுத்தல் பள்ளியில் நடந்திருந்தால், உங்கள் குழந்தையை ஆசிரியர் ஒருவரிடம் தெரிவிக்கச் சொல்லி ஊக்குவிக்கவும்.உங்கள் குழந்தை பள்ளியைத் தவிர வேறு யாருடனாவது பேச விரும்பினாலோ அல்லது கூடுதலான ஆதரவு அவர்களுக்கு உதவிபுரியும் என நீங்கள் நினைத்தாலோ, குழந்தைகள் உதவி இணைப்பு (Kids Helpline) என்ற இணையதளத்துக்குச் செல்லும்படி அவர்களிடம் கூறலாம். அவர்கள் 1800 55 1800 என்ற எண்ணில் இலவசமாக அழைக்கவும் முடியும்.

**நான் எப்போது பள்ளியைத் தொடர்பு கொள்வது?**

நீங்கள் பள்ளி ஊழியர்களிடம் பேசுவதில் உங்கள் குழந்தைக்குத் தயக்கமாய் இருக்கலாம். அந்த யோசனையைப் பற்றி விவாதிக்கவும். மேலும் பள்ளி அதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்பும் அத்துடன் உதவி புரியவும் முடியும் என்று அவர்களுக்கு உறுதியளிக்கவும்.

தேவைப்பட்டால், உங்கள் குழந்தையின் ஆசிரியருடன் சந்திப்புக்கான ஏற்பாட்டைச் செய்யவும். பள்ளி முதல்வரிடம் பேசுவதற்கும் நீங்கள் கேட்கலாம்.

உங்கள் குழந்தையின் பாதுகாப்பைப் பற்றிய கவலை ஏதும் இருந்தால் உடனடியாகப் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும்.

**பெற்றோர்களுக்கும் மற்றும் பராமரிப்பாளர்களுக்கும் ஆதரவு**

Kids Helpline -இல் பயிற்சி பெற்ற குழுவினர் அடங்கிய ஒரு பெற்றோர் இணைப்பும் உண்டு. அது 0-18 வயதுடைய குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஆதரவு, தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கும். நீங்கள் அவர்களை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையிலும், வார இறுதி நாட்களில் மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் ஒரே ஒரு உள்ளூர் அழைப்புக்கான செலவில் 1300 1300 52 என்ற எண்ணில் அழைக்கலாம்.

**தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை**

நீங்கள் பள்ளியையோ அல்லது பெற்றோர் தொடர்பு நியூ சவுத் வேல்ஸையோ (Parent Line NSW) தொடர்பு கொள்ள விரும்பி, ஆங்கிலத்தில் பேச உதவி தேவைப்படுமானால், தயவுசெய்து தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவையை 131 450 என்ற எண்ணில் அழைத்து, என்ன மொழியில் பேச வேண்டுமென்பதை அவர்களிடம் தெரிவித்து, இணைப்பாளரை தொலைபேசியில் அழைக்கச் சொல்லவும். உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பாளரை இணைப்பாளர் ஏற்பாடு செய்வார். இந்தச் சேவைக்கு உங்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படமாட்டாது.